## கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி
## S.C.No.22/2013

2025 ஆம் வருடம் ஜுன் மாதம் 18 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : திரு. சக்கரவர்த்தி (அ.சா.6 ) | | தொழில் | : ஓட்டுனர் |
| த/பெ., | : திரு. பொன்ராம் | | வயது | : 42 |
| க/பெ. | : திரு. | | | |
| கிராமம் | : பழைய ஆயக்குடி | | இனம் | : ஆண் |
| தாலுகா | : பழனி | | நாள் | : 18.06.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | | |

4,5, 6 எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்.

<u>முதல் விசாரணை :– (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.</u>

நான் பழைய ஆயக்குடியில் குடியிருந்து ஓட்டுனர் தொழில் செய்து வருகிறேன். 4 வது எதிரி மருதமுத்து என்பவரை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் 4 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சிக் கையொப்பம் என்னுடையதுதான். என்னிடம் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது சாட்சிக் கையொப்பமும் என்னுடையதுதான். அந்த கையொப்பங்களை ஆயக்குடி காவல்நிலையத்தில் வைத்து போட்டேன். சுமார் 15 வருடங்கள் முன்பாக ஆயக்குடி ஸ்டாண்டில் இருந்தபோது போலீசார் அழைத்ததன்பேரில் காவல்நிலையம் வந்து கையொப்பம் போட்டேன். கையொப்பம் வேண்டும் என்று சொல்லி கேட்டார்கள். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. 4 ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.5. அத்தாட்சியில் உள்ள இரண்டாவது சாட்சிக் கையொப்பம் அ.சா.ஆ.6. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பு வேண்டுகோளை ஏற்று சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

**கடந்த 31.03.2010ம் தேதியன்று இரவு 7.00 மணிக்கு நானும், எனது உறவினர் துரை என்பவரும் சண்முகநதி அருகே சென்றுகொண்டிருந்தபோது ஆயக்குடி காவல்நிலைய ஆய்வாளர் காவல் நிலைய குற்ற எண்.55/2010 என்ற வழக்கின் 4ம் எதிரியான மருதமுத்து என்பவரை பிடித்து விசாரித்துக் கொண்டிருந்தபோது மேற்படி எதிரி தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார் என்றும், அதற்கு நாங்கள் சாட்சியாக இருந்தோம் என்றும், மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்ட ரூ.37,000/–க்கான அத்தாட்சியில் நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும் போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.**

K. BHARATHI

Digitally signed by K. BHARATHI
Date: 2025.06.18 17:06:05 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**